தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

துன்முகி, ஆடி 27, திருவள்ளுவர் ஆண்டு—2047

2016 ஆகஸ்ட் 11, வியாழக்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10—00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"பொருள்கருவி காலம் வினைஇடனொடு ஐந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்."

தொழில் செய்வதற்கு வேண்டிய பொருள், தேவையான கருவி, தகுந்த காலம், செய்யவேண்டிய முறை, தகுந்த இடம் ஆகிய ஐந்தினையும் குறித்து நன்கு தெளிவாக ஆராய்ந்து செய்ய வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்—விடைகள். வினா வரிசை எண் 52, மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஜி. பார்த்திபன், மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

52—

உயர்மட்டப் பாலம்

***1322—திரு. என்.ஜி. பார்த்திபன்:**

மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், நெமிலி வட்டம், துரைபெரும்பாக்கம்—காவேரிப்பாக்கம் சாலையிலுள்ள தரைமட்டப் பாலத்திற்குப் பதிலாக உயர்மட்டப் பாலம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், நெமிலி வட்டம், துரைபெரும்பாக்கம்—காவேரிப்பாக்கம் செல்லும் சாலையில் உள்ள தரைப் பாலத்தை உயர்மட்டப் பாலமாக மாற்றும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஜி. பார்த்திபன் அவர்கள்.*

திரு. என்.ஜி. பார்த்திபன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மக்களால் நான், மக்களுக்காகவே நான்' என்று தவ வாழ்வு வாழ்ந்து வரும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கமல பொற்பாதம் பணிந்து வணங்குகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டம், நெமிலி வட்டம், காவேரிப்பாக்கம் ஒன்றியத்தைச் சேர்ந்த துரைபெரும்பாக்கம் பகுதி, சென்னை—பெங்களூரு நெடுஞ்சாலையிலிருந்து உள் பகுதி வழியாக துரைபெரும்பாக்கத்தைக் கடந்து, 25—க்கும் மேற்பட்ட கிராமங்களுக்குச் செல்லும் ஒரு பிரதான சாலையாக இருக்கிறது. மேலும், காவேரிப்பாக்கம் ஏரி தமிழகத்தில் மிகப் பெரிய ஏரியாக இருந்து வருகிறது. இதனுடைய ஆயக்கட்டுப் பரப்பு 6,278 ஏக்கராக இருக்கிறது. இந்த ஏரி 1,474 மில்லியன் கன அடி தண்ணீரைத் தேக்குகின்ற கொள்ளளவைக் கொண்டிருக்கிறது. மழை, வெள்ளக் காலங்களிலே இந்த ஏரியினுடைய உபரி நீர் வெளியேறிச் செல்லும்போது, சுமார் 10 அடி உயரத்திற்குமேல் வெள்ளப்பெருக்கு

2016 ஆகஸ்ட் 11]

ஏற்படுகிறது. இதனால், வெள்ளப்பெருக்குக் காலங்களில் அந்தப் பகுதி மக்கள் 40 கி.மீ. சுற்றிச் செல்லும் நிலை ஏற்படுகிறது. எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு இந்தப் பகுதியிலே இருக்கின்ற தரைப் பாலத்தை உயர்மட்டப் பாலமாக மேம்படுத்துவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை—சித்தூர்—பெங்களூரு சாலையிலிருந்து துரைபெரும்பாக்கம் செல்லும் சாலை 3.6 கி.மீ. நீளம் கொண்ட மாவட்ட இதரச் சாலையாகும். இச்சாலையில் கி.மீ. 2—ல் 60 மீட்டர் நீளமுடைய தாம்போக்கி ஒன்று உள்ளது. மழைக் காலங்களில் தாம்போக்கி வழியாக மழை நீர் செல்கின்றது. இதனால் போக்குவரத்திற்கு எந்தப் பாதிப்பும் இல்லை. எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்த இடத்திலே பாலம் கட்டவேண்டுமென்று சொல்லுகின்றார்கள். ஆகவே, அதை ஆய்வு செய்து, ஆய்வின் அடிப்படையிலே, பாலம் கட்டுவதற்கு சாத்தியக்கூறுகள் இருக்குமேயானால், அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.ஜி. பார்த்திபன் அவர்கள்.

திரு. என்.ஜி. பார்த்திபன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவேரிப்பாக்கம் ஒன்றியத்தில், அத்திப்பட்டு கிராமம் பாலாற்றின் குறுக்கே அமைந்திருக்கிறது. அத்திப்பட்டு கிராமத்தில் பாலாற்றின் குறுக்கே தரைமட்ட நீர்செறிவூட்டும் தடுப்புச் சுவர் எனப்படுகின்ற diaphragm அமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசில் ஏதேனும் செயற்குறிப்புத் திட்டம் இருக்கிறதா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்திப்பட்டு கிராமத்திற்கு நீர்செறிவூட்டும் தடுப்புச்சுவர் அமைப்பது பற்றி இங்கு கேட்டிருக்கின்றார். அதை ஆய்வு செய்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதைப்போல, சாத்தியக்கூறுகள் இருக்கின்றபட்சத்தில், அரசு நிதிநிலைக்கேற்ப ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிவேல் தியாக ராஜன் அவர்கள்.*

முற்பகல் 10–05

திரு. பழனிவேல் தியாக ராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மத்திய தொகுதிக்குட்பட்ட சுப்பிரமணியபுரம், ஜெய்ஹிந்த்புரம் பகுதிகளிலிருந்து மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் மேற்கு தொகுதிக்குட்பட்ட பழங்காநத்தத்தை இணைக்கும் மேம்பாலப் பணிகள் கடந்த ஏழு ஆண்டுகளுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டு, தற்போதும் நிறைவு செய்யப்படாமல் உள்ளது. அப்பாலம் மூன்று கிளைகள் இருக்கின்ற* design *ஆக அமைக்கப்பட்டுள்ளது. அதில் இரண்டு கிளைகள் முழுமையாக முடிந்துவிட்டன. மூன்றாவது கிளை இன்னும் ஆரம்பக் கட்டத்திலேயே இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அந்தப் பாலத்திற்கு அடியிலே இருக்கின்ற நிலம் நெடுஞ்சாலைத் துறையால் கையகப்படுத்தப்பட்டதனால், மாநகராட்சியினால் மேற்கொள்ளப்பட்டு வந்த அனைத்து அடிப்படைப் பணிகளும் இரத்துச் செய்யப்பட்டன. அப்பாலத்தின் கீழே இப்போது* subway *கட்டப்பட்டுள்ளதால், மூன்றாவது கிளை தேவையா என அறிய, ஆய்வுக் குழு அமைத்து, அதில் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் மற்றும் சட்டமன்ற உறுப்பினராகிய என்னையும் பங்கேற்கச் செய்து, கருத்துத் தெரிவிக்க வழிவகை செய்ய வேண்டும். மூன்றாவது கிளைப் பாலம் தேவையில்லையெனில், நெடுஞ்சாலைத் துறையால் கையகப்படுத்தப்பட்ட நிலத்தை மாநகராட்சிக்குத் திருப்பி ஒப்படைவு செய்து, அடிப்படைப் பணிகள் மீண்டும் நடைபெற*

2016 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தப் பாலம் தொடர்பாக நீதிமன்றத்திலே வழக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. ஆகவே, வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்ற காரணத்தினாலேதான், அந்தப் பணி தாமதமாகின்றது. ஆகவே, அதை ஆய்வு செய்து, நீதிமன்ற வழக்கில் இறுதி முடிவு வந்த பிறகுதான், அதற்குத் தீர்வு காணப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.எ. ஏழுமலை அவர்கள்.

திரு. டி.எ. ஏழுமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா என்ற கடவுளை வணங்குகிறேன். நான் நித்தம் நித்தம் வணங்கும் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன். சாதாரண எளிய தொண்டனாகிய என் போன்றவர்களுக்கெல்லாம் இந்த மாமன்றத்தில் பேச வாய்ப்பளித்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா என்ற தாயை வணங்குகிறேன். பூந்தமல்லி தொகுதி, குமணன்சாவடி பகுதியில் ரவுண்டானா அமைத்துத் தரப்பட வேண்டும். அங்கிருந்து பூந்தமல்லி பேருந்து நிலையம் செல்லும் வழியில் போக்குவரத்து நெருக்கடி அதிகமாக இருப்பதால் அந்தச் சாலையை அகலப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்கு பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய பகுதியிலே ரவுண்டானா வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் ஒவ்வோராண்டும் போக்குவரத்து நெரிசலைக் குறைப்பதற்காகச் சாலைகள் அகலப்படுத்தப்படுகின்றன. அதுமட்டுமல்லாமல் சாலைகளைச் சீரமைக்கின்ற பணிகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. ரவுண்டானா அமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதை, அரசு ஆய்வு செய்து, நிதிநிலைக்கேற்ப பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன் அவர்கள்.

திரு. கே.வி. சேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்காடு—விழுப்புரம் நெடுஞ்சாலையில் போளூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சேத்துப்பட்டு பேரூராட்சியில் போக்குவரத்து நெரிசலைச் சமாளிக்க, புறவழிச் சாலை அமைக்க அரசு முன்வருமா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசினால் ஒவ்வோராண்டும் ஒரு குறிப்பிட்ட அளவிற்கு புறவழிச் சாலை அமைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி போன்ற பகுதிகளிலே போக்குவரத்து செறிவு எங்கே அதிகமாக இருக்கின்றதோ, அந்தப் பகுதிகளிலே புறவழிச் சாலை அமைப்பதற்காக அரசால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தப் பகுதியிலும் போக்குவரத்து செறிவு கணக்கிடப்பட்டு, எதிர்வருகின்ற காலத்திலே நிதிநிலைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

2016 ஆகஸ்ட் 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள்.*

திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2008 ஆம் ஆண்டு எங்களுடைய தலைவர் கலைஞருடைய ஆட்சியிலே, அடையாற்றின் குறுக்கே அனகாபுத்தூர்–தரைப்பாக்கம் பகுதியில் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேல்மட்டப் பாலம் அமைக்கப்பட்டு, 80 சதவிகிதம் பணிகள் முடிவுற்ற நிலையிலே, கடந்த 4 ஆண்டுகளாக, தாம்பரம் விமானப் படை அலுவலர்கள், அவர்களுக்கு 1,000 சதுர மீட்டர் இடம் அதிலே இருக்கிறது, அதனால் அந்தப் பணியை நிறுத்த வேண்டுமென்று சொல்லி, நிறுத்தி வைத்திருக்கிறார்கள். ஆகவே, பொதுப் பணித் துறை அதிகாரிகளையும், விமானப் படை அதிகாரிகளையும் அழைத்துப் பேசி, அந்தப் பணியை விரைவிலே முடித்துத் தர இந்த அரசை நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். மேலும், இதற்கான இடத்தைக்கூட, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் விமானப் படைக்கு ஒப்படைத்திருக்கிறார்கள். அதைப் பெற்றுத் தராமல் காலதாமதம் ஏற்படுகிறது. இதைத் தவிர்த்து உடனே பாலம் அமைக்கும் பணியை விரைவில் முடித்துத்தர இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.*

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாலப் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. அதில் இணைப்புச் சாலைதான் பாக்கி இருக்கிறது. இந்த இணைப்புச் சாலை அமைகின்ற அந்தப் பகுதி* Indian Airlines–*க்கு உட்பட்ட பகுதியாக இருக்கின்ற காரணத்தினால்தான் காலதாமதம் ஏற்படுகிறது.* LC 22–*திரிசூலம் அருகே இரயில்வே கீழ்பாலம் அமைப்பதிலே* SCRC *எனப்படும் மத்திய அரசின் நிறுவனம் நில எடுப்புப் பணியில் இருக்கிறது. அதனால் காலதாமதம். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு தொடர்ந்து வலியுறுத்திக் கொண்டிருக்கிறது. விமானத் துறையைச் சேர்ந்த அதிகாரிகளால்தான் காலதாமதம் ஏற்பட்டிருக்கின்றதே*

தவிர மாநில அரசால் அல்ல. அந்த இணைப்புச் சாலை அவர்களுடைய பகுதியிலே வருகின்ற காரணத்தினால்தான் நிலம் எடுக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. தொடர்ந்து மாநில அரசு நிலம் எடுப்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. விரைவில் இணைப்புச் சாலைக்குத் தேவையான நிலத்தை எடுத்து அந்தப் பாலப் பணியை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 53, மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

53—

மின்மாற்றி

***2058—திரு. தங்கம் தென்னரசு:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சுழி தொகுதி, நரிக்குடி ஊராட்சி ஒன்றியம், தச்சனேந்தல் கிராமத்தில் புதிய மின்மாற்றி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நடந்த ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க நிகழ்ச்சிக்கு முதலில் நன்றியும் பாராட்டும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கூடங்குளம் அணுமின் நிலையத்தின் அலகு 1–ஐ நேற்றையதினம் நாட்டுக்கு அர்ப்பணித்திருக்கிறார்கள். அந்த நிகழ்விலே நமது இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்கள் கலந்து கொண்டுள்ளார்கள். ரஷ்ய அதிபரும், பாரதப் பிரதமரும் அந்த விழாவில் கலந்து கொண்டனர். மாண்புமிகு அம்மா அவர்கள் தெளிவாக அந்த மக்களுடைய பயம் போகின்ற*